சுருக்கம்

முதலமைச்சர் பொது நிவாரண நிதி – சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – திருநெல்வேலி மாவட்டம், இரவணசமுத்திரம் கிராமம், மீனாட்சிபுரம் அங்கன்வாடி மையக் குழந்தை வெண்ணிலாவின் பெற்றோருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இழப்பீடாக ₹50,000 நிதியுதவி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–2) துறை

அரசாணை (ப) எண்.01

நாள்.02.01.2015
திருவள்ளுவராண்டு 2045
ஜய, மார்கழி 18

படிக்கப்பட்டது:

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண்.சி3/17106/2014, நாள் 09.06.2014.

+++++

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார். திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், இரவணசமுத்திரம் கிராமம், மீனாட்சிபுரம் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் பயன் பெற்று வரும் வேல்முருகன் என்பவரின் 5 வயது மகளான வெண்ணிலா 30.5.2014 அன்று அங்கன்வாடி மையத்தில் மதியம் 2 மணிக்கு பிறகும் உறங்கி கொண்டு இருந்ததால், குழந்தையை எழுப்புவதற்கு பதிலாக, அங்கன்வாடி மைய உதவியாளர் திருமதி. சீதாலெட்சுமி, என்பவர் மையத்தில் உள்ள சமையல் எரிவாயு அடுப்பில் கத்தியை சூடாக்கி குழந்தையின் இடது காலின் மேல் பாதத்தில் சுமார் 4 செ.மீ நீள அளவிற்கு சூடு வைத்துள்ளார். இது தொடர்பாக, குழந்தையின் தாயார் 04.06.2014 அன்று அளித்த புகாரின் அடிப்படையில் திருமதி. சீதாலட்சுமி, அங்கன்வாடி உதவியாளர் கைது செய்யப்பட்டு, கடையம் காவல் நிலையத்தில் 04.06.2014 அன்று இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் குற்ற எண்.193/2014 பிரிவுகள் 294பி, 324, 506–இன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், காயமுற்ற குழந்தைக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்து வருவதாகவும், திருமதி. சீதாலெட்சுமி, அங்கன்வாடி உதவியாளர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நேர்வினால் கிராமத்தில் வேறு எவ்வித சட்ட ஒழுங்கு பிரச்சனையும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரது கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து, அங்கன்வாடி மையப் பயனாளி வெண்ணிலாவிற்கு அங்கன்வாடி உதவியாளரால் சூடு வைக்கப்பட்டு காயம் ஏற்படுத்தப்பட்டதை கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில்

"இந்நிகழ்விற்காக அரசின் வேறு எந்த திட்டத்தின் கீழும் நிதியுதவி எதுவும் பெற்றிருத்தல் கூடாது" என்ற நிபந்தனையுடன், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ₹50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) இழப்பீடாக வழங்கி ஆணையிடுகிறது.

3. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட்ட ₹50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)ற்கான காசோலையை, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர் நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி) த்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை காசோலையாகவோ அல்லது அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்கு மூலமாகவோ அங்கன்வாடி மையப் பயனாளி வெண்ணிலாவின் பெற்றோருக்கு வழங்கி, அவர்களிடமிருந்து வரிவில்லையிட்ட பற்றுச்சீட்டைப் பெற்று நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறும் மேலும் இது குறித்து அரசின் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறைக்கு தெரியப்படுத்தும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 69722/CMPRF/2014, நாள் 29.12.2014 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது,
அரசு செயலாளர்

பெறுநர்
அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்
நிதி (மு.பொ.நி.நி) துறை, சென்னை –9 (3 படிகள்)
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
இருப்பிட கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை –9
நகல்
நிதி (சந) (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி) துறை, சென்னை –9
இருப்பிட கணக்கு அலுவலர், (சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந2) துறையின் வழியாக)
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந2) த்துறை, சென்னை –9
இருப்பு கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

02/01/2015
பிரிவு அலுவலர்
02/01/15